Koviloor Digital Library

5-6

வர்ணாச்ரம தர்மம்

உ. கோவிலூர் KOVILOOR MADALAYAM மடாலயம்

5407
R65

प्रज्ञानं ब्रह्म

Acc. No.
5407

சுவாமி சித்பவானந்த

Koviloor Digital Library

Koviloor Digital Library

5-6

வர்ணாச்ரம தர்மம்

வைதிகமும் இலௌகிகமும்

அறிவிலும் ஆற்றலிலும் இனிமையிலும் மேல் நோக்கிச் செல்லுதல் வாழ்க்கையின் நோக்கமாகும். முன்னேற்றமடைதற்கு முகாமையாகச் சில கோட்பாடுகள் உள. அவை யென்றும் மாறாத் தன்மையுடையவைகள். கணித சாஸ்திரம் காலத்துக்கு ஏற்றவாறோ அல்லது இடத்துக்கு ஏற்றவாறோ மாறமுடியாது. எல்லா நிலைமைகளிலும், மக்கள் எல்லார்க்கும் கணிதத்தின் வகை ஒன்றே. 'அவ்வாறே வாழ்க்கை சம்பந்தமான உண்மைகள் எக்காலத்தும் எல்லார்க்கும் ஒரே பாங்குடன் மிளிர்கின்றன. ஆதலால் அவைகளுக்கு சனாதன தர்மம் என்னும் பெயர் ஏற்பட்டது. அக் கோட்பாடுகளையே பாரமார்த்திகப் பேருண்மைகளென்றும் வைதிகம் என்றும் சொல்லலாம். பின்பு இலௌகிகம் என்பது சமூக நடைமுறை. பாரமார்த்திக உண்மைகளை ஆதாரமாக வைத்துக்கொண்டு சமுதாயம் வாழ்க்கையைப் பண்படுத்த முயலுகிறது. அவ்வுண்மைகளை அனுஷ்டிக்குமளவு மக்கள் மேலோர் ஆகின்றனர். நல்ல நாகரீகமுடைய சமூகம் என்பது, மேலாம் உண்மைகளுக்கு ஒப்ப வாழும் இயல்புடையோரது கூட்டம் என்று பொருள்படும். வைதிகத்தைக் கடைப்பிடிக்குமளவு இலௌகிகம் சீர்படும். ஆனால் உலகத்தவர் அவ்வுண்மைகளினின்று வழுவிவிட்டால் அதனால் விளை

Koviloor Digital Library

யும் கேடு வைதிகத்தை வந்து சாராது; உண்மை எப்பொழுதும் உயர்நிலையில்நின்று தன்னைத்தான் காத்து வருகிறது. உண்மையும் இறைவனும் ஒன்றன்றோ? வைதிகத்தினின்று வழுவுகின்ற அளவு மக்கள் கீழ் நிலைக்கு வீழ்கின்றனர். அங்ஙனம் வீழாது மேல் நிலைக்குப் போக முயலுபவர் அதன் கோட்பாட்டை உள்ள படி அறிதல் அவசியமாகின்றது.

வருணாச்ரம தர்மம் என்பது வைதிக உண்மைகளுக்கு ஒப்ப வாழ முயலுதல் என்பதாகும். வருணங்கள் நான்கு உள. அவையாவன:- சூத்திர, வைசிய, க்ஷத்திரிய பிராம்மண என்பனவாம். அவ்வாறே ஆச்ரமங்களும், பிரம்மசரியம், கிரகஸ்தம், வானப்பிரஸ்தம், சன்னியாசம் என்று நான்கு இருக்கின்றன. நான்கு ஆச்ரமங்களில் உயர்வு தாழ்வு கிடையாது. பிறந்த சிசு ஒன்றின் வாழ்க்கையானது குழந்தைப்பருவம், பிள்ளைப் பருவம், காளைப்பருவம், முதிர்பருவம் ஆகியவைகளில் பூர்த்தியாவது போன்று நான்குவித ஆச்ரமங்களில் மேலாம் வாழ்க்கை முடிவு பெறுகிறது. ஆச்ரமம் என்பதற்கு வாழ்க்கையின் புனிதம் வாய்ந்த படித்தரம் என்று பொருள். ஆச்ரமத்தில் போன்று வருணத்திலும் கயமை தூய்மை என்னும் வேறுபாடு கிடையாது. ஒரு வருணம் மற்றொரு வருணமாகப் பரிணமிக்கிறது. ஆத்மீக வாழ்க்கையில் படித்தரத்துக்கு ஏற்றவாறு தர்மம் அல்லது கடமையும் அதிகரிக்கிறது. வர்ணாச்ரம தர்மம் என்பது நான்கு வருணங்களுக்குரிய தருமங்கள், நான்கு ஆச்ரமங்களுக்குரிய தருமங்கள் எனப் பிரிகின்

Koviloor Digital Library

றது. இக்காலத்து இலௌகிகம் இக்கோட்பாட்டை எவ்வளவு தூரம் பழக்கத்தில் கொண்டுவர வல்லதா யிருக்கிறது என்பதை முக்கியமாகக் கணக்கில் எடுத்துக்கொள்ளாது, இந்த வைதிகக் கோட்பாடு எவ்வளவு மேன்மை வாய்ந்ததா யிருக்கிறது என்பதையே நாம் ஈண்டு ஆராயப்புகுவோம்.

நிறமும் தொகையும்

வருணம் என்பது நிறம் என்று பொருள்படுகிறது. வருணத்துக்குப் பிறப்பிடம் குணம். அவை சத்வம், ரஜஸ், தமஸ் என்று மூவகைப்படுகின்றன. இம் முக்குணங்களுள் பிரபஞ்சத்துள்ள அனைத்தும் அடங்கி விடுகின்றன. ஜீவர்களுள் புல் முதல் பிரம்மதேவன் பரியந்தம் எல்லாரும் முக்குணங்களுக்கு உட்பட்டவர்களே. சத்வ குணத்தின் நிறம் வெண்மை; ரஜோ குணம் சிவப்பானது; தமோ குணமோ கறுத்திருப்பது. முக்குண வேறுபாட்டைக் கொண்டு நான்கு வகை ஜீவர்கள் சிருஷ்டிக்கப்படுகின்றனர். "**चातुर्वर्ण्यं मया सृष्टं गुणकर्मविभागशः**:- குண கரும வேறுபாடுகளை முன்னிட்டு நான்கு வருணங்கள் என்னால் சிருஷ்டிக்கப்பட்டன" என்பது ஸ்ரீ கிருஷ்ணபகவானுடைய வாக்கு (கீதை 4-13). சத்துவகுணம் மேலோங்கி யிருப்பவன் பிராம்மணன். சத்வ குணத்தைத் துணையாகக் கொண்ட ரஜோகுணம் ஓங்கப்பெற்றவன் க்ஷத்திரியன். தமோ குணத்தைத் துணையாகக்கொண்ட ரஜோகுணம் தலையெடுக்கப் பெற்றவன் வைசியன். தமோ குணத்தைச்

Koviloor Digital Library

சிறப்பாகவும் ரஜோ குணத்தைச் சாமான்யமாகவும் உடையவன் சூத்திரன் ஆகிறான். இங்ஙனம் குண மேலீட்டுக்கு ஏற்ப நால்வர்க்கு நான்கு வருணங்கள் அமைகின்றன. பிராம்மணனது நிறம் வெண்மை; க்ஷத்திரியன் செந்தாமரை போன்றவன்; வைசியனுக்கு வருணம் மஞ்சள்; சூத்திரனுடைய நிறம் கருமை. நிறத்தின் பாகுபாடு ஸ்தூல சரீரத்தை ஒட்டியதன்று. தோலின் சாயலைச் சார்ந்ததன்று ஜாதி. உடல் வெளுத்திருக்கும் ஐரோப்பியர் எல்லாரையும் பிராம்மண இயல்புடையார் என்பது ஒவ்வாது. அமெரிக்காவில் இருக்கும் செம்மனிதர்களை (Red Indians) க்ஷத்ரியர்கள் என்று தொகுப்பது எங்ஙனம்? மங்கோலியர்களாகிய சீனர்களும் ஜப்பானியர்களும் மஞ்சள் நிறமுடையவர் ஆவர். ஆயினும் அவர்கள் அனைவரும் வைசியர் ஆகார். கருத்த திருமேனியை உடையராயிருந்த இராமனையும் கிருஷ்ணனையும் சூத்திர வருணத்தில் சேர்ப்பது ஒவ்வாது. வருண விமரிசனத்துக்கு ஸ்தூல சரீரத்தின் வர்ணம் உதவாது. அது எந்த நிறத்தை வேண்டுமானாலும் உடையதாயிருக்கலாம். குணத்தை முற்றிலும் தழுவியது மன அமைப்பு. குண வேறுபாட்டுக்கு ஏற்ப மனதின் நிறம் மாறுகிறது. ஒருவனுடைய மனது எத்தகைய நிறமுடையது என்பதை ஞானியர் காண்கின்றனர். ஆத்ம சாதனத்தில் சிறிது மேல்நோக்கிச் செல்லுபவர், தியானவேளையில் உள்முகமாகக் காணும் நிறமே தங்கள் மனத்தின் நிறமாகும். மனது பண்படுகிறஅளவு ஒருவன் வருணத்தில் மேலோன் ஆகிறான்.

Koviloor Digital Library

“அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு ஒழுகலான்,” என்னும் பொய்யாமொழி இக்கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டது.

ஸ்ரீ KOVILOOR MADALAYAM மடாலயம்

குண வேறுபாட்டுக்கு ஏற்ப மரம் செடி கொடிகளையும், பறவைகளையும், விலங்குகளையும் நான்கு வருணங்களாகப் பிரிக்கலாம். மக்களுள் நான்கு வருணங்கள் அமைந்திருப்பது இந்தியாவின் தனியியல் பென்று சிலர் கருதுகின்றனர். அஃது உண்மையன்று. உலகனைத்தும் ஓரே பொருளிடத்திருந்து உண்டானவை. உலகத்தவர்களது மனபரிபாகத்துக்கு ஏற்ப அவர்கள் நான்கு வருணத்தவர்களாகப் பிரிகின்றனர். எல்லா நாடுகளிலும் சமுதாயங்களிலும் இயல்பாக ஏற்பட்டுள்ள இப்பிரிவினைகளைக் காணலாம். இந்த நான்கு பிரிவுகளுக்கு வேருக பஞ்சமன் அல்லது ஐந்தாமவன் ஒருவன் இருக்கிருன் என்பதும், அவன் தீண்டத் தகாதவன் என்பதும், மனிதன் செயற்கையாகச் செய்து கொண்ட வேறுபாடேயாகும். இயற்கை யமைப்பில் ஐந்தாவது வருணத்துக்கு இடமில்லை. அது எப்படியென்று சுருங்க ஆராய்வோம். ஆத்மபோதம் அல்லது அறிவின் விழிப்பு நான்கு படித்தரங்களில் இருக்கிறது. அயர்ந்து உறங்கும் நிலை சுழுத்தி என்று சொல்லப்படுகிறது. மரம் செடி கொடிகள் இந்நிலையில் இருக்கின்றன. இதற்கு ஒருபடி மேல் இருப்பது கனவு. விலங்குகளும் பறவைகளும் கனவு போன்ற ஆத்மபோதத்தைப் பெற்றிருக்கின்றன. அதைவிட மேலா

Koviloor Digital Library

னது நனவு அல்லது ஜாக்கிரதாவஸ்தை. மக்கள் பெற்றுள்ள ஆத்மபோதம் இந்த மூன்றும் படித்தரத்துக்கு வந்துள்ளது. துரியம் என்பது தெளிந்த அறிவுத்திரள் அல்லது சித்கணம் எனப் பொருள்படுகிறது. ஞானிகளும் தேவர்களும் அடைந்துள்ள நிலை இது. ஆக இந்நான்கு நிலைகளுள் அதாவது உறக்கம் கனவு, நனவு, துரியம் ஆகியவைகளுள்—உயிர் வகைகளையெல்லாம் அடக்கி விடலாம். மக்களுள் உறங்கும் நிலையில் இருப்பவர் சூத்திரர். தமோகுணத்தின் தலையெடுப்பு அதற்கு மூலகாரணம். கனவு காணும் பக்குவத்தில் இருப்பவர் வைசியர். அவர்களிடத்துத் தமோகுணத்தோடு கலந்த ரஜோகுணம் மிளிர்வதாகும் என்பது முன்னமே சொல்லப்பட்டது. நனவு அல்லது ஜாக்கிரதாவஸ்தையில் நிலை பெற்றவன் க்ஷத்திரியன். அவனிடம் இருப்பது ரஜஸோடு கலந்த சத்துவகுணம். துரியத்தில் திளைத்திருப்பவன் பிராம்மணன். அதற்கேற்ற குணவிசேஷமும் அவனுக்குண்டு. முக்குணங்களின் பாகுபாட்டை உருவகப்படுத்தி, சூத்திரனை ஸ்தாவரம் என்றும், வைசியனைப் பசு என்றும், க்ஷத்திரியனை மனிதன் என்றும், பிராம்மணனை தேவன் என்றும் நூலோர் இயம்புவர். பள்ளிக்கூடத்தில் பாலர் வகுப்பில் துவக்கி மேல் வகுப்புகளுக்குப் பிள்ளை ஒருவன் போவது போன்று மக்கள் எல்லாரும் சூத்திரர்களாய்ப் பிறந்து, பிறகு மனபரிபாகத்துக்கு ஏற்றவாறு மேல் வருணங்களுக்குப் போகின்றனர். பழைய பயிற்சிக்கும் புதிய முயற்சிக்கும் ஒப்ப ஒரே ஜன்மத்தில் நான்கு

Koviloor Digital Library

வருணங்களையும் கடந்து செல்லுபவர் உளர்; சிறிது சிறிதாக மேல் நோக்கிச் செல்லுபவரும் உண்டு. நெறி வழுவிக் கீழ் நிலைக்கு வருவாரும் உளர். எந்நிலையில் இருப்பினும் மக்கள் எல்லாரையும் தொகையில் நான்கினுள் அடக்கிவிடலாம்.

பண்பும் தொழிலும்

மக்களாக வடிவெடுத்தவர்களுள் தன்மை வேறுபாட்டை யாண்டும் காணலாம். சூத்திரன் என்பவன் எப்பொழுதும் உடல் உணர்ச்சியிலேயே நிலை பெற்றவன். சிந்திக்கும் தன்மை அவனிடத்துக் கிடையாது. உடலை ஒட்டிய இன்பங்களை மட்டும் அவன் அறிவான். தானாக முயன்று எதையும் சாதிக்கும் வல்லமை சூத்திரனுக்குக் கிடையாது. ஏவப்பட்டாலொழிய அவனால் காரியம் ஒன்றும் நடைபெறாது. ஏவலாள் என்றே அவனைச் சொல்லவேண்டும். உடல் உழைப்பைக் கொண்டு ஆகிற வேலைகளுக்கெல்லாம் அவன் பெரிதும் தகுந்தவன். வாழ்க்கைக்கு முதற்படியாயிருப்பது உடல் உழைப்பு. அது இல்லாவிட்டால் வாழ்வு என்னும் பயணம் நடைபெறாது. உடலில் உள்ள உறுப்புகளுள் கால்கள் இரண்டுக்கும் ஒப்பாவான் சூத்திரன். தன் சுபாவத்துக்கு ஏற்றவாறு குற்றேவல் புரிவதே அவனுடைய தொழிலாகும்.

அறிவு மேலீட்டால் இன்பங்களை நன்கு ரசிக்கும் தன்மை வைசியனுக்கு வருகிறது. அவன் செல்வத்தைப் பெருக்குவதில் கருத்துடையவன். ஆக்கத்துக்கு

Koviloor Digital Library

ஏதுவான திட்டங்கள் அவனுடைய உள்ளத்தில் எழுந்துகொண்டிருக்கும். தனமும் தானியமும் அதிகரிப்பது வைசியனுடைய முயற்சியாலேயே நடைபெறுகிறது. உடல் வளர்ச்சிக்கு இன்றியமையாத உணவுப்பொருள்களெல்லாம் அவனாலேயே உண்டுபண்ணப்படுகின்றன. कृषिगौरक्ष्यवाणिज्यं वैश्यकर्म स्वभावजम्— கிருஷியும் கால்நடை வளர்ப்பதும் வாணிபம் பண்ணுவதும் வைசிய சுபாவத்துக்கு ஏற்ற தொழில்களாகும். கைத்தொழில் அபிவிருத்தியும் பல நாடுகளுக்கிடையில் பண்டங்களை மாற்றித்தருதலும் அவனுடைய பிரவிருத்திகளாம். சரீரத்தில் உள்ள அவயவங்களுள் வயிற்றுக்குச் சமானமாகின்றான் வைசியன்.

நன்று இது, தீது இது என்று அறிந்து நன்மையைக் கடைப்பிடிக்க வல்லவன் க்ஷத்திரியன். ஆளும் தன்மைஇயல்பாகவே அவனுக்கு அமைகிறது. உயிர்களை அன்புடன் ஓம்புதலும், நெறியினின்று வழுவுபவரை நெறிக்குத் திருப்புதலும் அவனுடைய செயல். பராக்கிரமம் அவனைவிட்டுப் பிரிவதில்லை. துணிவுக்கு அவன் பேர்பெற்றவன். போர் புரிந்தும் அவன் நீதியை நிலை நிறுத்துவான். அறப்போரை வலிய மேற்கொள்ளலும், தொடுத்த போரினின்று புறங்காட்டி யோடாமையும் அவன் படைத்துள்ள பண்புகளில் முக்கியமானவைகளாம். வேண்டியவர்க்கு வேண்டியதை வழங்கவல்ல வள்ளல் என்பான் க்ஷத்திரியன். சமூக நடைமுறையில் குறையொன்றும் நேராவண்ணம் அதைத் திறமையுடன் காப்பவனும் அவனே. நெஞ்சத்தினின்று உட

Koviloor Digital Library

5407
R65

லெங்கும் இரத்தம் வியாபிக்கின்றது. அதே ரத்தம் சுத்தி யடைதற்கு மறுபடியும் நெஞ்சத்துக்கு வருகிறது. தோள்கள் தேகத்துக்குத் பேராற்றலைத் தருகின்றன. க்ஷத்திரியனைத் தோளுக்கும் நெஞ்சுக்கும் சமனிடலாம்.

அறம் வளர்ப்பவன் பிராம்மணன். தபசு ஒன்றே அவன் படைத்துள்ள தனம். ஆதலால் அவன் தபோ தனன் என்று அழைக்கப்படுகிறான். அழியும் உலகப் பொருள்களில் அவனுக்கு ஆசையில்லை. மனதை ஆத்ம நிஷ்டையில் உள்முகமாகத் திருப்பியவன்; இந்திரியங் களை அறவே வென்றவன். பிறரால் தனக்குத் தீங்கு விளைந்தவிடத்தும் தான் பிறருக்குத் தீங்கு செய்யாது நன்மையே செய்பவன் அந்தணன் ஆவான். அவனுடைய மனம் மொழி மெய் ஆகிய முக்கரணங்களும் தூய பிர விருத்திகளில் போய்க்கொண்டிருக்கும். இனிமைக்கு அவன் உறைவிடம். எக்காரணத்தை முன்னிட்டும் பிராம்மணன் பணத்தில் பற்று வைக்கமாட்டான். தனத்தை விரும்புகிற அளவு தவம் குறைந்துவிடும். எளிய வாழ்க்கையும் உயர்ந்த எண்ணமுமே ஜீவியத்தில் அவன் கொண்டுள்ள நோக்கமாகும். அவன் உள் ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசான். அதாவது அவனுடைய சொல்லும் சிந்தையும் ஒருமைப்பட் டிருக்கும். பூவுலகில் தனது என்று சொல்லுதற்கு அந்தணனுக்கு ஒன்றுமில்லை. பாரமார்த்திகப் பெரு வாழ்வே அவன் படைத்துள்ள பேறு. கல்விக்கும் ஞானத்துக்கும் நிலைக்களம் பிராம்மணனே. தான் பெற்றுள்ள அறத்தையும் சீலத்தையும் ஞானத்தையும்

Koviloor Digital Library

ஓயாது உலகுக்கு வழங்குதலே அவன் செய்யும் தொழி லாகும். சரீரத்தில் சிரசு வகிக்கின்ற ஸ்தானத்தை சமூகத்தில் பிராம்மணன் வகிக்கின்றான்.

சில கோட்பாடுகள்

வருணம் பிறப்பை அடிப்படையாகக் கொண்ட தன்று. குலம் ஒருவாறு பயன்படுகிறது. நல்லார் ஆவ தற்கு நற்குடியில் பிறப்பது பெரிதும் பயன்படுகிறது. ஆனால் ஒரு குலத்தில் பிறந்ததன் காரணமாக ஒருவன் மேலோன் அல்லது கீழோன் ஆகவேண்டும் என்பது இயற்கையின் நடைமுறையன்று. வல்லமை வாய்ந்த வக்கீல் ஒருவனுக்குப் பிள்ளைகளாகத் தோன்றுபவர்க ளெல்லாம் நல்ல வக்கீல்கள் ஆவார்கள் என்பது நிச்சய மல்ல. தக்க அறிவை உடையராகி அவர்கள் வக்கீல் ஆக முயன்றால் தகப்பனது தகைமை அவர்களுக்குப் பயன்படும். குலத்தினின்று கிடைக்கும் உதவியும் அத்தகையதே. குணத்தையும் கருமத்தையும் முன் னிட்டு மானுடர் நான்கு வர்ணங்களாகப் பிரிகின் றார்கள் என்று பகவான் கீதையில் பகர்கின்றாரேயன்றி, குலத்தை முன்னிட்டுப் பிரிகின்றார்கள் என்று இயம்ப வில்லை. ஒரே குடும்பத்தில் பிறக்கும் சோதரர் நால்வர் குணவிசேடத்தை முகாமையாகக் கொண்டு நான்கு வருணங்களாகப் பிரிவது முறைமை. ஒரே பிராம்மண னுக்குப் பிள்ளைகளாகப் பிறக்கும் இருவருள், கோயி லில் பூஜைபண்ணுபவனை அர்ச்சகன் என்றும், மடைப் பள்ளியில் சமைப்பவனை மடையன் அல்லது சமையற் காரன் என்றும் சொல்லவேண்டும் என்கிறார் ஸ்ரீ ராம கிருஷ்ணர். வருண பேதம் இயற்கையின் அமைப்பு.

Koviloor Digital Library

அதை முன்னிட்டு யாரையும் அலட்சியப்படுத்துவது அறிவுடையோர் செயலன்று. அவ்வாறே தொழில்களுள் உயர்வு தாழ்வு கிடையாது. நான்கு வருணத்தார்களது தொழிலும் புனிதம் வாய்ந்தவைகளே. பள்ளிக்கூடத்தில் மேல் வகுப்பில் படிக்கிற மாணக்கனுக்குக் கீழ் வகுப்புப் பாடமும் தெரியும். வருணத்தில் மேல் படிக்குப் போகின்றவர்களுக்கு ஆரம்ப தசையில் இருப்பவர்களது தொழில் நன்ருய்த் தெரியும். வேலைக்காரனுயிருந்து பழகுபவனே பிறகு நல்ல தலைவன் ஆகிருன். பயிற்சியும் பரிபாகமும் அடைந்தவர்க்குப் பொறுப்பு வாய்ந்த பெரிய வேலைகள் தரப்படுகின்றன. சிக்கனமாகத் தொழில் புரிவதற்கு (Economy of labour) இதுவே சிறந்த உபாயம். மனிதனது செயலினின்று அவனது வருணத்தை யூகித்தறியலாம்.

நான்கு ஆச்ரமங்கள்

கல்வி கற்கும் இளமைப் பருவமே பிரம்மசரிய ஆச்ரமம் என்பது. ஆனுல் வெறும் ஏட்டுக் கல்வியில் கருத்து வைப்பதோடு அது நின்று விடுவதில்லை. புலனடக்கமும் ஒழுக்கமும் அவ்வாச்ரமத்துக்கு இன்றியமையாத பயிற்சிகளாகும். வாழ்க்கை என்னும் கட்டிடத்துக்கு அஸ்திவாரம் போன்றது அது. உறுதியும் உழைப்பும் அதனிடத்திருந்தே உதிக்கின்றன. உடல் வளர்ச்சிக்கு ஒவ்வோர் உறுப்பும் உறுதுணையாவது போன்று, உலக நன்மைக்கு உகந்ததாயிருக்கவேண்டும், ஒவ்வொருவனுடைய வாழ்க்கையும். இத்தகைய பான்மையைப் புகட்டுவதே பிரம்மசரிய ஆச்ரமம்.

Koviloor Digital Library

நல்ல பயிற்சியைப் பெற்றபின் யுவன் ஒருவன் இல்லறத்தை ஏற்றுக்கொள்ளுகிறான். ஈண்டு ஆண்பாலுக்குச் சொல்லப்படுகின்ற கோட்பாடுகளெல்லாம் பெண்பாலுக்கும் பொருந்துகின்றன. மரம் ஒன்று, நிலம் நீர் நெருப்பு காற்று முதலியவைகளினின்று சக்தியைப் பெற்று, அதைப் பூவாகவும் பழமாகவும் மாற்றி உலகுக்கு வழங்குவதுபோன்று, கிரகஸ்தன் சமூகத்துக்கு யாண்டும் ஆதரவளிக்கிறான். அவனன்றி நிலவுலக வாழ்க்கை நிலைபெறாது.

இம்மைக்கு இன்றியமையாத கடமைகளையெல்லாம் ஆற்றியபின் குடும்பஸ்தன் ஒருவன் உலகப் பொறுப்புகளினின்று விலகிக்கொள்ள எத்தனிக்கிறான். அத்தருணத்தில் அவனுக்கு வானப்பிரஸ்தன் என்று பெயர். பின்பு தன்னை முற்றிலும் பாரமார்த்திகத்துக்கென்றே ஒப்படைப்பவன் சன்னியாசி. அப்படி அவன் ஆத்மீகத்துறையில் இறங்கியபின் உலகுக்கு வேறு ஒரு விதத்தில் உதவுகிறான். இல்லறத்தான் உடலை ஒட்டிய அனைத்தையும் ஆக்கி அளிப்பது போன்று, ஆத்மீக வாழ்க்கைக்கு வேண்டிய அனைத்தையும் துறவறத்தான் தந்தருள்கிறான். சூத்திரத் தன்மையில் இருப்பவன் சன்னியாச ஆச்ரமத்துக்குத் தகுதியுடையவன் அல்லன். ஏனென்றால் வருணப் பாகுபாடும் ஆச்ரமப் பாகுபாடும் மனதின் பரிபாகத்தைச் சார்ந்தவைகளாம்.

சமூக அமைப்பு

உலக வாழ்க்கையில் நலனும் பொலனும் யாண்டும் கலந்து உள. தீமை கலவாத நன்மை கிடையவே

Koviloor Digital Library

கிடையாது. கூடிய வரையில் கேட்டைக் களைந்து நலனைக் கோலுதல் அறிவுடையோரது இயல்பு. பல நாடுகளில் பலவிதமான முறைகளில் சமூகம் சீராக அமைக்கப்பட்டுள்ளது. அம்முறைகளையும் அப்போதைக்கப்போது ஆராய்ந்து பார்த்து வருகின்றனர். இவைகள்யாவற்றிலும் சாலச்சிறந்தது வருணாச்ரம தர்மம் என்று இயம்பவேண்டும். இந்த ஏற்பாடு பாரமார்த்திக உண்மையை ஆதாரமாகக் கொண்டது. இதை நன்கு கடைப்பிடித்த காலங்களிலெல்லாம் நம்நாடு மேன்மைகள் அனைத்துக்கும் உறைவிடமாக மிளிர்ந்தது. மனிதனுடைய முன்னேற்றத்துக்கும் சமூகச் சீர்மைக்கும் உறுதுணையாவது வருணாச்ரம தர்மம். ஒருவனுடைய இயல்புக்கு ஏற்றவாறு உடல் வளர்ச்சிக்கும் ஆத்மீக வளர்ச்சிக்கும் இது பெரிதும் துணைபுரிகிறது. பிள்ளைப் பருவத்தில் இருப்பவன் பாதுகாக்கப்படுகிறான். பெரியவன் ஆனபிறகு அவனுக்குப் பொறுப்பு அதிகரிக்கிறது. சிறுவனுக்கு சுகபோகத்துக்கு உரிமையுண்டு; பொறுப்பான கடமையைச் செய்ய இன்னும் அவன் தகுந்தவன் ஆகவில்லை. வயதுமுதிர்ந்த பிறகு சுக ஜீவனத்துக்கு ஏற்ற உரிமைகள் குறையவும் பொறுப்பான கடமைகள் அதிகரிக்கவும் செய்கின்றன. வருண தர்மம் இத்தகையது. கீழான வருணத்தில் இருப்பவன் நன்கு காக்கப்படுகிறான். மேல் வருணத்துக்குப் போகின்ற அளவு கடமைகள் அதிகரிக்கவும் உரிமைகள் குறையவும் செய்கின்றன. தன்னலத் தியாகமும் சமூகத் தொண்டும் மேலோனது கடமை. ஒரு குடும்பத்தில்

Koviloor Digital Library

எப்படியோ சமூகத்திலும் அப்படியே. தனக்கு சுக போகம் ஒன்றும் வேண்டாம் என்று நீத்துவிட்டு, உலகுக்கு ஆக்கத்தையும் அறிவையும் வழங்குபவனே உலகம் தானாகவே போற்ற முற்படும். இக்காலத்து மக்கள் இந்த ஏற்பாட்டுக்கு நேர்மாறாகப் பொறுப்பு ஒன்றையும் ஏற்றுக்கொள்ளாது போகத்தையும் சுய நலத்தையுமே கருதுகின்றனர். ஆதலாலேதான் நாடு நலிவுறலாயிற்று. இப்பொழுது நாட்டுமக்கள் அனைவரும் பெரிதும் சூத்திர நிலைமையில் இருக்கின்றனர். வைசியராயிருப்பவர் சிலர்; பிராம்மண க்ஷத்திரிய நிலைமைகளுக்குத் தகுதியுடையாரைக் காண்பது அரிது. அந்நிலைமைகளுக்கு ஏற்ற தியாகத்தைச் செய்பவரும் மனபரிபாகத்தை அடைய விரும்புபவரும் மிகச் சிலரே. மேலோராலன்றி மேலான சமுதாயம் அமையாது. வேத நெறியில் விளக்கியிருப்பதற்கு ஒப்பான அந்தணரும், அரசரும், வைசியரும் தோன்றுவார்களாயின் சமூகம் திரும்பவும் பண்டைச் சிறப்பைப் பெற்றுப் பொலியும். வருணாச்ரம தர்மத்துக்கு ஒப்பான சம தர்மம் கிடையாது. எளியாரைப் பேணவும் வலியாரைப் பயன்படுத்திக்கொள்ளவும், சட்ட திட்டமின்றி, பலாத்காரமின்றி, அன்பு ததும்பிய நேர்முறையில் உதவுவது வர்ணாச்ரம தர்மம் ஒன்றே. இது நம்நாட்டுப் பாரமார்த்திகச் செல்வங்களுள் ஒன்று. நம் நன்மையின் பொருட்டும் உலக நன்மையின் பொருட்டும் இந்த மேலான சமூக அமைப்பை நம் வாழ்க்கையின் வாயிலாக விளக்கிக்காட்ட இந்தியர்களாகிய நாம் அனைவரும் கடமைப்பட்டிருக்கிறோம்.

Koviloor Digital Library

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரின்

உபதேசகள்

வேகவைத்த நெல்லைப் பூமியில் விதைத்தால் அது மறுபடியும் முளைக்காது. வேகவைக்காத நெல்தான் முளைவிடும். அதுபோல ஸித்தனுன பிறகு ஒருவன் இறப்பானுனல் அவன் மறுஜன்மம் அடைவதில்லை. அஸித்தனே தான் ஸித்தனுகும் வரையில் திரும்பத் திரும்பப் பிறவி யெடுக்கவேண்டும்.

மீனை உண்பவர்கள் உபயோகமற்ற அதன் தலையையும் வாலையும் தள்ளிவிட்டு மிருதுவான அதன் நடுப் பாகத்தையே கொள்வார்கள். அதுபோல நமது சுருதி ஸ்மிருதிகளில் கூறப்பட்டிருக்கும் பழைய விதிவிலக்குகளில் உபயோகமில்லாதவற்றைத் தள்ளியும் சீர்திருத்தியும் தற்காலத்துக்கு அனுகுணமாகும்படி செய்து கொள்ளவேண்டும்.

இராத்திரியில் ஆகாயத்தில் அநேக நக்ஷத்திரங்களைக் காண்கிருய்; ஆனுல் சூரியோதயமானதும் அவைகள் தென்படுவதில்லை; ஆதலால் பகற்போதில் ஆகாயத்தில் நக்ஷத்திரங்களே இல்லையென்று சொல்லலாமா? மனிதனே! உனது அக்ஞான காலத்தில் நீ ஈசுவரனைக் காண முடியாததனுல், ஈசுவரனே இல்லையென்று சாதிக்காதே.

பாம்பும் அதன்மேற்சட்டையும் வெவ்வேருனவை. அதுபோல ஆத்மாவும் சரீரமும் வெவ்வேருனவை.

Koviloor Digital Library

மேகம் சூரியனை மறைப்பதுபோல, மாயையும் ஈசுவரனை மறைக்கின்றது. மேகம் அப்பால் அகன்று போனதும் சூரியன் காணப்படுகிறது. அதுபோல மாயை அகன்றதும் ஈசுவரன் கண்ணுக்குத் தென் படுவர்.

நீரும் நீர்க்குமிழியும் ஒன்றேயாம்; அக்குமிழி ஜலத்திலேயே தோன்றி ஜலத்திலேயே மிதந்து, கடைசியில் ஜலத்தோடேயே இரண்டறக் கலந்து போகின்றது. அதுபோல ஜீவாத்மா பரமாத்மா என்ற இரண்டும் ஒன்றேயாம். அளவு மாத்திரத்தால்தான் அவைகளுக்குள் வித்தியாசம் ஏற்படுகின்றது; ஒன்றுக்கு அளவுண்டு; மற்றொன்றுக்கு அளவில்லை. ஒன்று பிற பொருள்மீது சார்ந்துள்ளது; மற்றொன்று சுயேச்சையை யுடையது.

புலியினிடத்தும் ஈசுவரன் இருப்பது உண்மையே; ஆனால் அக்காரணத்தைக் கொண்டு நாம் அதன் முன்னர்ப்போய் நிற்கக்கூடாது. கெட்டவர்களிடத்தும் ஈசுவரன் இருப்பது வாஸ்தவம். ஆயினும் நாம் அவர்களுடன் சகவாஸம் செய்வது சரியன்று.

புயல் காற்றடிக்கும்போது அரசமரம் இன்னது, ஆலமரம் இன்னது என்று வித்தியாசம் கண்டுபிடிக்க முடியாது. அதுபோல, உண்மை ஞானமாகிய புயற் காற்று ஒருவனுக்குள் அடிக்கும்போது அவனிடம் ஜாதி பேதம் இருக்கமுடியாது.

Printed at the Tapovanam Press, Thiruppalathurai

Koviloor Digital Library

5407
R65

Koviloor Digital Library

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்
திருப்பராய்த்துறை
திருச்சி

உ. கோவிலூர்
KOVILOOR
MADALAYAM
மடாலயம்

விலை அணா மூன்று